ரெடிமேட் ஆடைகள்
மற்றும்
சிறுவர், சிறுமிகளுக்கு ஏற்ற
உடைகளுக்கும்
நைராசியான இடம்
துளசி
வண்ணச் சோலை
69, சிறப்பு அங்காடி
உட்புறம்
யாழ்ப்பாணம்.
[சி-897]

மக்களின்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மங்கையர் விரும்பும்
வண்ண வண்ணப்
பட்டுப் புடைவைகளுக்கு
நாடவேண்டிய
நைராசியான இடம்
துளசி
வண்ணச் சோலை
69. சிறப்பு அங்காடி
உட்புறம்
யாழ்ப்பாணம்.
[சி-897]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை (11 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 135

# நேற்று நடந்த பேச்சுகள்;
# புலிகளுக்கு அதிருப்தி!

## முன்னேற்றமின்றி முடிவுற்றதாக தமிழ்ச்செல்வன் பின்னர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 11

ஸ்ரீலங்கா அரசுத்தரப்புப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காம் கட்டப் பேச்சுக்கள் திருப்தி தருபவையாக அமையவில்லை என விடுதலைப்புலிகள் தரப்புத் தெரிவித்துள்ளது.

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. முன்னர் நடந்த பேச்சுக்கள் போன்றே — வழமை மாதிரியாகவே — முடிவு ஏதும் எடுக்கத்தக்க நிலை ஏற்படாமலேயே நேற்றைய பேச்சுக்கள் முடிவுற்றன என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்களின் பின்னர் அது குறித்து செய்தியாளர்களுக்கு திரு. தமிழ்ச்செல்வன் தகவல் வெளியிட்டார். அவர் கூறியதாவது:

நேற்றைய பேச்சுக்கள், வழமையானவை போன்று வாக்குறுதிகளும் உறுதிமொழிகளும் கொண்டவையாகவே இருந்தன.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் எந்தவித முடிவும் எட்டப்படவில்லை. அது எமக்கும் எமது மக்களுக்கும் ஏமாற்றம் தருவதாகவுள்ளது.

பொருளாதாரத் தடைநீக்கம், மீன்பிடித் தடைத் தளர்வு ஆகியவை குறித்து ஏற்கனவே அரசு அறிவித்திருந்தும், அதிலும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத சில முடிவுகள் அவர்களின் கருத்தில் இருந்ததால் அதில் சில விளக்கங்களை நாம் கோரினோம்.

அதுகுறித்து ஜனாதிபதியுடன் கதைத்து பதில் தருவதாக அரசுத்தரப்புப் பிரதிநிதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீன்பிடித் தடையைத்தளர்த்துவதிலும் மோசமான பல்வேறு கட்டுப்பாடுகள்

மீன்பிடித் தடையைத் தளர்த்துவதாக முதலில் அரசு அறிவித்திருந்தது. ஆனால் அதில்கூட இப்போது மோசமான கட்டுப்பாடுகளை அரசுத்தரப்பினர் விதித்திருக்கிறார்கள்.

— இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

எமது கரையோரப் பிரதேசத்தில் பெரும் பகுதி இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக— இராணுவ முகாம்களைக் கொண்டவையாக உள்ளன.

இந்த முகாம்களைச் சுற்றி இரண்டு கடல் மைல் பிரதேசத்துக்கு — மீன் வளம் மிக்க பிரதேசத்துக்குள் — எமது மீனவர்கள் பிரவேசிக்கக் கூடாது எனக் கட்டுப்பாடு விதிக்கும் ஒரு யோசனையையே அரசுத்தரப்பினர் முன்வைத்தனர்.

மீன்வளம் மிக்க — விடத்தல்தீவு முதல் கேரதீவு வரையுள்ள — பிரதேசத்தில் ஐந்து மைல்களுக்கு அப்பால் சென்று மீன்பிடிக்கக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதிக்கின்றனர்.

எனினும் இரவுநேர மீன்பிடித்தலுக்கான கட்டுப்பாட்டை நீக்க அவர்கள் இணங்குவதாகத் தெரிகிறது.

ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அரசுத்தரப்பு வெளியிடும் மீன்பிடித் தளர்வு என்ற யோசனை எமது மக்களுக்கு அனுகூலமாக அமையப்போவதில்லை என்று அரசுத்தரப்புக்குச் சுட்டிக் காட்டினோம் — என்றார்.

(உ-3)

## யூரியா மீதான தடை தொடரும் எரிபொருளை அனுமதிக்க இணக்கம்

யூரியா போன்ற — எமது விவசாயிகளுக்கு அத்தியாவசியமான — பொருள்கள் மீதான தடையை நீக்கவும், அரசுத் தரப்பினர் நேற்று இணங்கவில்லை.

—இவ்வாறு நேற்றைய பேச்சுக்களின் பின்னர் திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யூரியா மற்றும் இராணுவ சம்பந்தப்பட்ட பொருள்கள் தவிர ஏனைய பொருள்கள் மீதான தடையை நீக்குவதற்கு அரசுத் தரப்பு இணக்கம் தெரிவித்தது

எரிபொருள்கள் மீதான தடையை நீக்குவதாகவும் அவர்கள் கூறினர்.

யூரியா போன்றவை எமது விவசாயிகளுக்கு அத்தியாவசியமானவை என்பதால் அவற்றின் மீதான தடையை நீக்குவதன் அவசியத்தை நாம் வலியுறுத்தினோம். அதை அவர்கள் கருத்தில் எடுத்து, ஜனாதிபதியுடன் பேசி பதிலை அறிவிப்பதாகத் தெரிவித்தனர் — என்றார்.

(உ-3)

## செய்தியாளரை சந்திக்க பின்னடிப்பு

நேற்று யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் பேச்சுக்களை முடித்துக் கொண்டு இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கிய அரசுப் பிரதிநிதிகள் மூவரும் அங்கு திரண்டிருந்த செய்தியாளர்களைச் சந்திக்காது, தவிர்த்துச் சென்றனர்.

இதனால் அங்கு காத்து நின்ற செய்தியாளர்கள் ஏமாற்றமுற்றனர்.

பேச்சுக்களின் பின்னர் யாழ்ப்பாணத்திலும் செய்தியாளர்களுடன் பேசுவதைத் தவிர்ப்பதற்கு அரசுத் தரப்பினர் முயன்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

[உ-3-6]

## பேச்சுக்கள் தோல்வி?

நேற்றைய பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களைச் சந்திக்க அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் பின்னடித்ததை நோக்கும் போது பேச்சுக்கள் தோல்வியடைந்ததாகக் கருத முடியும் என பி.பி.ஸி. சிங்கள செய்தியாளர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளை அரசியல் பேச்சுக்கு இணங்க வைக்க முடியாத நிலையிலேயே அரசுத் தரப்பினர் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். [உ-3-6]

## ஜனாதிபதி செயலகம் இன்று அறிக்கை

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில நடந்த 4-ஆம் கட்டப் பேச்சுக்களின் பெறுபேறுகள்குறித்து ஜனாதிபதி செயலகம் இன்று காலை அறிக்கை ஒன்றை விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.ஸி. சிங்கள சேவை செய்யாளர் குறிப்பிட்டார். (உ)

## தீர்வுத்திட்டம் எடுத்து வரப்படவில்லை

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக நேற்று யாழ். வந்த அரசுத்தரப்புத் தூதுக்குழுவினர் இனப்பிரச்சினைத தீர்வுக்கான அரசியல் தீர்வுத திட்டம் எதையும் தம்முடன் எடுத்து வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)



யாழ் சென். ஜோன்ஸ் மைதானத்தில் ஹெலியில் வந்திறங்கிய அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் அழைத்துவரப்படும் காட்சி

## 3 பிரதிநிதிகள் கொழும்பு திரும்பினர் மூவர் யாழ்ப்பாணத்தில் தங்கினர்

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நேற்றுக் காலை 9 50 மணியளவில் ஹெலிக்கொப்டரில் யாழ்ப்பாணம் வந்திறங்கிய அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் ஆறு பேரில் மூவர் நேற்று மாலையே ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி சென்று அங்கிருந்து கொழும்பு திரும்பினர்.

அரசுத் தூதுக்குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி, பிரிகேடியர் சிறி பீரிஸ் கடற்படை அதிகாரியான கப்டன் பிரசன்னா ராஜரட்ன ஆகியோரே யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் வந்திறங்கிய ஹெலிக்கொப்டர் மூலம் புறப்பட்டுச்சென்றனர்.

ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ, பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, சாள்ஸ் அபேசேகரா ஆகியோர் யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் தங்கி நிற்கின்றனர்.

நேற்றைய பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் முடிவுகளை யாழ்ப்பாணத்தில் நிற்கும் அரசுப் பிரதிநிதிகள் பெற்று, அதனை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிப்பர் என்றும் —

இன்று மாலை இவர்கள் ஹெலி மூலம் கொழும்பு திரும்புவர் என்றும் — எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## பூநகரி முகாம் விவகாரத்திலும் அரசின் நிலைப்பாடு மாறவில்லை

பூநகரி முகாம் தொடர்பான விடயத்தில் அரசுத் தரப்பினர் தமது பழைய நிலையிலேயே இருக்கிறார்கள்; மாறவில்லை.

—இவ்வாறு நேற்று பேச்சுவார்த்தைகளின் பின்னர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கூறினார்.

வடக்கிற்குப் பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறக்கும் விடயத்தில் எமது நிலைப்பாட்டை — எமது தலைவரின் இறுதியானதும் உறுதியானதுமான முடிவை அரசுத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

ஏதாவது ஒரு முகாம் அகற்றப்பட்டு, மக்களுக்கான போக்குவரத்துப்பாதை அவசியமாகத் திறக்கப்படவேண்டும என்பதை வலியுறுத்தினோம்.

வடக்கு, கிழக்கில் இருநூறுக்கும் அதிகமான முகாம்கள் இருக்கின்றன.

அவற்றில் ஓர் இராணுவ முகாமை வாபஸ் பெற்று பாதையைத் திறக்க முடியாத அரசு, அரசியல் தீர்வு சம்பந்தமான பெரிய முடிவு எடுக்கக்கூடியதாக இருக்குமா? — என்று நாம் கேட்டோம்.

முன்னைய அரசும் இராணுவமும் எம்மையும் எமது மக்களையும் குடாநாட்டுக்குள் சிறைப்படுத்திய நிலையில், அதை வைத்துக் கொண்டு இன்றைய அரசு பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது என்பது சாத்தியப்படாது.


## ஆயர் கெனத், உயங்கொட இருவரது போக்குக் குறித்தும் புலிகள் அதிர்ச்சி!

அங்கிலிக்கன் ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆகியோர் பேச்சுக்களின் போது தெரிவித்த கருத்துக்கள் எமக்கு அதிர்ச்சி தருபவையாக இருந்தன.

இவ்வாறு நேற்றைய பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

அங்கிலிக்கன் ஆயர் பல தடவைகள் இங்கு வந்து எமது மக்களின் பிரச்சினைகளை, அவர்கள் எதிர்கொள்ளும் அவலங்களை நேரடியாகக் கண்டறிந்தவர்; ஒளாலி ஊடாக பல தடவைகள் இங்கு வந்து கஷ்டங்களைப் பார்த்தவர்; அவற்றை உணர்ந்தவர்.

ஆனால் அரசின் இறுக்கமான முடிவுகளை நியாயப்படுத்தும் வகையில் பேச்சுக்களின் போது அவர்கள் கருத்து வெளியிட்டனர். அது எமக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது. — என்றார். (உ-3)



நேற்று அரசு - புலிகள் பேச்சின்போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட 'B' வெங்காய விதை விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல. 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36088]

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.15/3, ஓடை ஒழுங்கை (ராதா லேன்), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [36561]

### தவறிவிட்டது

மட்டுவில் தெற்குக்கும் நாவற்குழிக்கும் இடையில் மூன்று கட்டுகொப்பி நோட்ஸ் எழுதியபடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சி. சிவபாக்கியநாதன், மட்டுவில் தெற்கு [ரஞ்சன் கடை அருகில்], சாவகச்சேரி அல்லது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், சட்டநாதர் கோயில் வீதி நல்லூர். [36166]

### மண்ணெய் விநியோகம்

தெ மிலை நு பல் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 12-4-95 காலை 10-00 மணி — 2 00 மணி வரை ஐந்து லீட்டர் வழங்கப்படும். தொடர்பு: மாணவர் அவை. [36146]

### வீனஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T.V. அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-649]

## செப்ரிசீமியா 10 வயது சிறுமி பலி

செப்ரிசீமியாவுக்கு பாடசாலை மாணவி பலியான சம்பவம் கடந்த வியாழக்கிழமை பளையில் இடம்பெற்றது.

பளை அல்லிப்பளையைச் சேர்ந்த சண்முகராசா பிரியதர்சினி [வயது 10] என்ற சிறுமியே மரணமானவராவார்.

ஒரு வாரமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இச்சிறுமி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும்—

வியாழக்கிழமை காய்ச்சல் அதிகரிக்கவே பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்தில் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-117]

---

## அறிவித்தல்

### ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
திருநெல்வேலி

மேற்படி ஆலயத்தில் 09 – 04 – 1995 இல் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் செயலாளர் திரு இ கலைச்செல்வன், உறுப்பினர் திரு. சி. ஆனந்தகிருஷ்ணன் ஆகிய இருவருக்கும் பதிலாக திரு. வி. இரத்தினகுமார் செயலாளராகவும். திரு. பொ. முத்துச்சாமி உறுப்பினராகவும் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்த அங்கத்தவர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் பிரகாரம் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினர்கள் வருமாறு:

| | |
|---|---|
| தலைவர்: | திரு. கு. துரைராசா |
| உப தலைவர்: | திரு. இ. நிநகியானந்தன் |
| செயலாளர்: | திரு. வி. இரத்தினகுமார் |
| உப செயலாளர்: | திரு. இ. இரகுநிதசிங்கம் |
| பொருளாளர்: | திரு. ஏ. பேரின்பராசா |

உறுப்பினர்கள்

| | |
|---|---|
| சு. பரஞ்சோதி | சோ. மகாலிங்கம் |
| பொ. முத்துக்கிருஷ்ணன் | பொ. முத்துச்சாமி |

நன்றி.

கு. துரைராசா,
தலைவர்.

[36159]

---

## புதிய வகுப்புகள்

- ★ Cake Icing (கேக் ஐசிங்)
- ★ Sugar Craft (மாச்சீனி அலங்காரம்)
- ★ Fondant Icing (மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்)
- ★ Make up and Hair Dressing (ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும்)
- ★ Flower Making (Silk Ribbon Stocking Net மலர்ச் செண்டுகள் [Bouquets] தயாரித்தல்)

16 – 04 – 1995 முதல்
ஆரம்பமாக இருக்கின்றன.
15-04-1995 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**YOGI HOME SCIENCE ACADEMY**
71B நாயன்மார் வீதி
கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி)
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-941)

---

ரவி ராஜ் ஆடையகம் வழங்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

- ✱ அனைத்து ஐவுளி வகைகளும்,
- ✱ றெடிமேட் வகைகளும்

08 – 04 – 1995 முதல்
14 – 04 – 1995
வரை மட்டும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

**ரவி ராஜ் ஆடையகம்**
77, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
(சோதியா தெரு) (சி-970)

---

உ
மானிப்பாய் சோதி வேம்படி
அருள்மிகு
காளியம்மன் தேவஸ்தானம்

## வசந்த நவராத்திரி பூர்த்தி விழா

காலம்: 11 – 04 – 1995 செவ்வாய்க்கிழமை
காலை: 9-00 மணிக்கு சங்காபிஷேகம்
மாலை: 4-00 மணிக்கு அம்பாள் நகர ஊர்வலம் வருதல்

இரவு நிகழ்ச்சிகள்:

★ இசை நிகழ்ச்சி ★

செல்வி லசந்தி சத்தியநாதன் அவர்கள்
"தேவி முகூர்த்தம்"
தொடர் சொற்பொழிவு நிறைவு
விரிவுரையாளர்: திரு. அ. குமாரவேல் அவர்கள்
"செந்தமிழ் வசீகர கலாநிதி"
என்னும் பட்டம் திரு. அ. குமாரவேல் அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி S. K. சண்முகநாதன் அவர்கள் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பார்.

இவ்விழாவில் அம்பாளின் அருள்பெற அடியார்களை அழைக்கின்றோம்,

தர்மகர்த்தா:
ந. விவேகானந்தராஜா.

'BITSMANS' கூலவு நிறுவனம
மானிப்பாய் [சி 939]

---

## அறிவித்தல்

இணுவில் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு பகீரதன் என்பவரின் அடையாள அட்டையும் முக்கிய பொருள்களும் மணற்காடு வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உடன் பெற்றுக் கொள்ளவும்,

மணற்காடு,
சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்.
குடத்தனை.

[36168]

---

## இறைவனுக்கு துதி உண்டாவதாக!
ஆமென்

உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப் படுத்துவது எனக்கு நன்மையாகக் கண்டது. என் இக்கட்டில் நான் என் உதடுகளை திறந்து என் வாயினால் சொல்லிய பொருத்தனையை கூறுவேன் மெய்யாய் தேவன் எனக்கு செவி கொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தை கேட்டார். என் ஜெபத்தை தள்ளாமலும் தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த அருமை ரட்சகர் கிறிஸ்து இயேசுவிற்கே கோடி துதி கனம் செலுத்துகிறேன்.

J Queen Selve,
Thalayadi.

[36167]

---

## புதிய மகிழ்ச்சி ஆடையகம்

உங்கள் அபிமான யாழ்நகர் வைரவர் கோயிலடி புடைவைக்கடை 10 ஆம் திகதி திங்கள் முதல் கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது.

**புதிய மகிழ்ச்சி ஆடையகம்**
[நியூ ஹப்பி ரெக்ஸ்]
24A. பேஜ் சோதியா தெரு,
சிறப்பு அங்காடி வரிசை,
யாழ்ப்பாணம்.
[சி/935]

---

சித்திரக் கலைஞர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
தொடர்பு சாதன ஆணைக்குழு
நடத்தும்

## சித்திரப் படக்கதைப் போட்டி

யாழ். மாவட்ட தொடர்பு சாதன ஆணைக்குழு நடத்தும் சித்திரப் படக்கதைப் போட்டியில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். சிறப்புப் பரிசுகளுடன் தெரிவு செய்யும் படக்கதைகள் பிரசுரித்து வெளியிடப்படும்.

கரு: கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டதாக

அளவு: 10'' X 16'' — (½) அளவு கொண்ட நான்கு பக்கங்களுக்குள் அதிக சித்திரப் படங்களுடன் வசனங்களும் அமைத்தல் வேண்டும்

1ஆம் பரிசு ரூ 1 500 2ஆம் பரிசு ரூ 1 000
3ஆம் பரிசு ரூ. 500

மேலும் பிரசுரத்திற்குத் தெரியாகும் சித்திரப் படக் கதைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 வழங்கப்படும்.

உங்கள் படைப்புக்களை:
15-05-1995 க்கு முன்
அனுப்பி வைக்கவும்

செயலாளர்,
தொடர்பு சாதன ஆணைக்குழு,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(36160)

---

## நன்றி

எனது விவசாயப் பண்ணையில் 19-06-94 இல் களவாடப்பட்ட நீரிறைக்கும் இயந்திரத்தை களவாடியவர்களிடமிருந்து மீட்டு என்னிடம் ஒப்படைத்தமைக்கு பருத்தித்துறை — நாகர்கோவில் காவல் பணிமனை அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. கார்த்திகேசு,
கற்பகா பண்ணை,
குடத்தனை.

[36169]

---

# வாகன இலக்கங்களை வழங்க புதிய திட்டம்

### தெற்கில் அமுலுக்கு வரும்

கொழும்பு, ஏப் 11

வாகனங்களுக்கு இலக்கங்களை வழங்குவதில் மாற்றம் கொண்டு வருவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

நிர்வாக சேவைகளை இலகுவாக்கும் நோக்குடன் இந்த மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இத்திட்டத்தின் படி வாகனங்களின் இலக்கங்களை பார்த்ததும் வாகனம் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்பதை அறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் மாகாண மட்டத்தில் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

இத்திட்டத்துக்கு ஆலோசனை வழங்க ஜேர்மன் நிபுணர் ஒருவர் கொழும்பு வந்துள்ளார். (ஐ-3)

## தோல்விக்கு றொனி கூறும் காரணம்

சிறுபான்மை இனமக்களின் ஆதரவு இல்லாததினாலேயே ஐ. தே. க கடந்த தேர்தல்களில் தோல்வியுற்றது.

முன்னாள் நிதி அமைச்சரும் களுத்துறை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினருமான றொனிடிமெல் அம்பாறையில் நடந்த ஐ தே. கவின் கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-6)

---



## அமரர் வ. சின்னத்தம்பி
அவர்களின்
ஞாபகார்த்த பரிசுக்கான

# தாவரவியல் போட்டிப் பரீட்சை - 95 A/L

3ஆவது சுற்றில் அதிவிசேட சித்தி அடைந்து
யாழ். மாவட்டத்தில் முன்னணியில் உள்ள மாணவர் விவரம்

| பெயர் | பெற்ற புள்ளிகள் Jan | Feb | சராசரி |
|---|---|---|---|
| G ஜீட்ரிரோன் (சென். பற்றிக்ஸ்) | 98 | 91 | 94.5 |
| M றஜனி (யாழ்ப்பாணக் கல்லூரி) | 94 | 89 | 91.5 |
| A டொமினிக் அரவிந்தன் (யாழ் இந்து) | 95 | 87 | 91.0 |
| D வினோதன் (யாழ் இந்துக்கல்லூரி) | 98 | 81 | 89.5 |
| S. செல்வதுஷ்யந் (யாழ். இந்து) | 94 | 82 | 88.0 |
| B. சுதந்திரமதன் (யாழ் இந்து) | 94 | 80 | 87.0 |
| K சுபாஜினி (யாழ்ப்பாணக் கல்லூரி) | 94 | 80 | 87.0 |
| T. புளோரின் (சுண்டிக்குளி மகளிர்) | 91 | 81 | 86.0 |
| M. செந்தில்குமரன் (யாழ் இந்து) | 92 | 80 | 86.0 |
| பி. ஜோண்சன் (சென். ஜோன்ஸ்) | 92 | 80 | 86.0 |
| க. சசிலா (வேம்படி) | 90 | 81 | 85.5 |
| R ரமேஷ்சங்கர் (ஹாட்லி) | 90 | 81 | 85.5 |
| S. S தர்மராஜசிங்கம் (சென்- பற்றிக்ஸ்) | 91 | 79 | 85.0 |
| T கிரிதரன் (யாழ். இந்து) | 90 | 79 | 84.5 |
| A. ஷிரோணி (வேம்படி மகளிர்) | 90 | 78 | 84.0 |
| N சுகுந்தன் (யாழ். இந்து) | 87 | 81 | 84.0 |
| G பாமினி (யாழ். இந்து மகளிர்) | 85 | 72 | 83.5 |
| M நிலாந்தி (திருக்குடும்ப கன்னியர்) | 92 | 74 | 83 |
| K செந்தூர்பதிராஜ் (சென் ஜோன்ஸ்) | 87 | 78 | 82.5 |
| M. பிரதீபன் (யாழ் இந்து) | 87 | 78 | 82.5 |
| S றஜீவ் (யாழ் இந்து) | 84 | 80 | 82.0 |
| A. தனலக்ஷ்மி (வல்வை மகளிர்) | 87 | 77 | 82.0 |
| A. ஜெபானந்தி (சுண்டிக்குளி) | 83 | 80 | 81.5 |
| S மருதாசலமூர்த்தி (கொக்குவில் இந்து) | 83 | 80 | 81.5 |
| G. செந்தூரான் (யாழ் இந்து) | 85 | 77 | 81.0 |
| V. கலைசெல்வி (யாழ் இந்து மகளிர்) | 88 | 74 | 81.0 |
| S. சாந்தி (வட்டுக்கோட்டை இந்து) | 87 | 74 | 80.5 |
| S. சத்தியப்பிரியா (வேம்படி மகளிர்) | 89 | 72 | 80.5 |
| K. மேகலா [வேம்படி மகளிர்] | 87 | 74 | 80.5 |
| K ஜெகதீஸ்வரி (வட்டுக்கோட்டை இந்து) | 86 | 74 | 80.0 |
| A சியாமளா (வட்டுக்கோட்டை இந்து) | 87 | 73 | 80.0 |
| M திருவருள் செல்வன் (சென் பற்றிக்ஸ்) | 85 | 75 | 80.0 |
| S. வரதராஜன் (சென் பற்றிக்ஸ்) | 84 | 76 | 80.0 |
| S சுகுமார் (யாழ். இந்து) | 87 | 73 | 80.0 |
| T நர்மதா வேம்படி மகளிர்) | 83 | 77 | 80.0 |
| S. வசந்தன் (யாழ் இந்து) | 83 | 77 | 80.0 |

மீட்டல் வகுப்பு மாணவர்களுக்கான முதலாவது சுற்றில்
அதி விசேட சித்தி அடைந்து யாழ். மாவட்டத்தில்
முன்னணியில் உள்ளவர்கள்

| பெயர் | பெற்ற புள்ளிகள் Jan. | Feb. | |
|---|---|---|---|
| K குகப்பிரியா (வடமராட்சி கல்வி நிலையம்) | 93 | 82 | 87.5 |
| இ. மேகலா (சயன்ஸ் ஹோல், யாழ்) | 90 | 82 | 86.0 |
| சி. சிவசுதன் (சயன்ஸ் ஹோல், யாழ்) | 80 | 84 | 82.0 |
| N வனிதா (மணியம் கல்வி நிலையம், பருத்தித்துறை) | 88 | 76 | 82.0 |
| S மேனகா (மணியம் கல்வி நிலையம், பருத்தித்துறை) | 84 | 79 | 81.5 |
| த. தாரணி [சயன்ஸ் ஹோல், யாழ்.] | 85 | 76 | 80.5 |
| த. சங்கவேல் (சயன்ஸ் ஹோல், யாழ்.) | 83 | 78 | 80.5 |
| R. சிறீராகவன் [சயன்ஸ் ஹோல், யாழ்.] | 81 | 80 | 80.5 |
| பா. றயணி [பீக்கொண், உடுப்பிட்டி] | 87 | 74 | 80.5 |

திருமதி சிவகாமி சின்னத்தம்பி
(இளைப்பாறிய அதிபர்)

விக்கினேஸ்வரா வீதி,
சரசாலை.

(சி-942)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்துவிட்டுள்ள பூநகரிப் பாதையை நீங்கள் ஏன் பயன்படுத்தவில்லை?

## யாழ். மாணவர் குழுவிடம் சந்திரிகா கேள்வி

கொழும்பு, ஏப். 11

## ரயிலில் சங்கிலி அறுப்பு சம்பவங்கள்

கொழும்பு, ஏப். 11

கொழும்பு - வவுனியா ரயில் நிலையத்தில் நிற்கும் போது கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த ரயில் நிலையத்தில் 25 சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

## ஐ.தே.க. ஆட்சியில் பதவியிலிருந்து வெளியேறிய ரூ.க. ஆதரவாளரான பழைய ஊழியருக்கு பதவி உயர்வுடன் மீண்டும் வேலை

கொழும்பு, ஏப். 11

1994இல் நடந்த தென் மாகாண சபைத் தேர்தலில்...

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 11

## விதை தானியம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 11

## கோலப்போட்டி

கொழும்புத்துறை, ஏப். 11

வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (இ-30)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 11

## முத்திரை விற்பனை இயந்திரம்

## பெண்களை இம்சைப்படுத்தும் ஆண்களை தண்டிக்க புதிய சட்ட விதிகள்

பெண்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில்... இந்த சட்ட விதிகளின் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம்... விதிக்கப்படவிருக்கின்றன.

## புதிய புலனாய்வுப் பிரிவு மாத இறுதியில் அமைப்பு

## பொலிஸ் மா அதிபர் தகவல்

புதிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவொன்று இம் மாத இறுதியில் நிறுவப்படும் என்று...

[இ-5-3]

## 19 இல் கூடும்

## பொருள்கள்

---

# மக்களின் மத உணர்வுகளை புண்படுத்தும் தமிழகத்தின் போஸ்டர் கலாசாரம்

## கருமாரியாக, அன்னை மேரியாக ஜெயலலிதாவின் திருக்காட்சி

தமிழ்நாடு பெரும் மதக்கலவரம் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை குளிர்ச்சிப்படுத்துவதற்காக ஒட்டப்படும் சுவரொட்டி ஒன்று பல லட்சம் ரூபா செலவில்...

அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 47 ஆவது பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது.

### கருமாரி அம்மன்

கருமாரி அம்மன் சிலை முதல் அமெரிக்க சுதந்திர தேவி சிலை வரை உள்ள...



ஜெயலலிதா

தனது பெயர் இவ்வளவு பிரபல்யமாகி... அடுத்த முறை எம்... தேர்தலில் வெற்றி... முதல்வர்...

இந்த போஸ்டர் விவகாரம் பற்றி இந்திய பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த...

"நான் இதற்கு முன்னர்... போஸ்டரை மட்டும் இவ்வளவு... தெரியவில்லை" என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீட்டு வேலையால்
# மாணவருக்கு மனவியாதி ஏற்படும் ஆபத்து!
### மருத்துவ ஆய்வில் தகவல்

கொழும்பு, ஏப். 11

பாடசாலையால் வீடு வரும்மாணவர்கள் பாடசாலையில் கொடுக்கும் வேலைகளை வீட்டில் செய்வதால் (Home work) அவர்களுக்கு உளப்பாதிப்பு ஏற்பட்டு மனவியாதி ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

சீனாவில் 20ஆயிரம் மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வில் இந்த விடயம் வெளிவந்துள்ளது.

இப்படியானவர்கள் மற்றவர்களுடன் பழக வெட்கப்படுவர் என்றும், —

தனிமையை விரும்புவர் என்றும் —

உற்சாகம் இழந்து காணப்படுவர் என்றும். அந்த மருத்துவ ஆய்வு அறிக்கை கூறுகிறது. [இ-3]

# திருமலை வாலிபர்கள் கண்டியில் கைது!

கொழும்பு, ஏப். 11

கண்டி தலதா வீதியில் உள்ள கோட்டலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்கள் எனக் கூறப்படும் திருகோணமலை உப்பு வெளியைச் சேர்ந்த நான்கு வாலிபர்கள் மத்திய பிரதேச விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலீஸ் விசாரணை முடிவடையும் வரை இவர்களை விளக்க மறியலில் வைக்க வேண்டும் என பொலீஸார் தெரிவித்ததை அடுத்து, கண்டி நீதிவான் டபிள்யூ. பி. டியூடர் குணரத்ன சந்தேக நபர்கள் நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். [இ-5-3]

# அரச தோட்டக் கம்பனி நிர்வாகம் தனியாரிடம்

கொழும்பு,ஏப். 11

அரசாங்கத்தின் கீழ் உள்ள தோட்டக்கம்பனிகளில் 13 கம்பனிகளில் நிர்வாகத்தை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட 10தோட்டக் கம்பனிகளின் நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது என்று தோட்ட நிர்வாகத்தை கண்காணித்துவரும் கண்காணிப்பு குழு திருப்தி தெரிவித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை மலையகத்தில் தொழிலாளர்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்பட்டது.

அதேவேளை— தோட்டக் கம்பனிகளை 50வருட குத்தகைக்கு தனியாரிடம் ஒப்படைக்கும் அரசின் நடவடிக்கையை தொழிற்சங்க கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. (இ-3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி மாற்றம்

உள்ளே 5 ஆம் பக்கத்தில் வெளியாகி உள்ள செவ்வாய் இரவு புலிகளின்குரல் நிகழ்ச்சிகளில்—

இரவு 8 02 மணி தொடக்கம் 8. 20 மணி வரையான நிகழ்ச்சி அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக — பிந்திக்கிடைத்த குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (அ)


## மலிவு விற்பனை

06 – 04 – 95 முதல் 15 – 04 – 95 வரை

✱ பிறசியர் வகைகள், ✱ சொக்ஸ் வகைள்,
✱ பெனியன்கள், ✱ யட்டிகள்,
✱ ஸ்கேப், ✱ பான்ரீஸ்
மற்றும்
புடைவை வகைகள் நாடுங்கள்

**சிறி முருகன்**
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-959)



உ
சிவமயம்
திருநெல்வேலி
ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோஹணஸ்வாமி
தேவஸ்தானம்

**வருடாந்த மகோற்சவத்தை**
முன்னிட்டு நடைபெறும்

## தெய்வீக தொடர் இசைச் சொற்பொழிவு

11 . 04 . 1995 தொடக்கம்
16 . 04 . 1995 வரை, தினசரி
மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை
நடத்துபவர்:- சொல்லிசைச்செல்வன்

**அன்னைதாசன் க. ஆனந்தராசா**
அவர்கள்
[ஆசிரியர் - சைவத்தமிழ் வித்தியாசாலை உரும்பிராய்]
விடயம்:- சிவனருட்செல்வர்கள்
பக்கவாத்தியம்
மிருதங்கம்:- செல்வன் ஆ. கோகுலன்
ஆர்மோனியம்:- ஜோன்சுபாஸ்

17 – 04 – 95 திங்கள் தொடக்கம்
30 – 04 – 95 வரை, தினசரி
மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை
திரு. சிவகுமார் அவர்களினால்

**திருவிளையாடற் புராணம்**
என்னும் பொருள்பற்றித் தொடர் சொற்பொழிவு
நடைபெறும்
– தேவஸ்தானம் –

[36176]


## சென்னையில் புலிச்சந்தேக நபர்கள் தப்பிய சம்பவம்:
# புலிகள் ஆதரவாளர் என கருதப்படும் இளைஞர் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஏப். 11

சென்னை மத்திய சிறையில் இருந்து விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் தப்பிய சம்பவம் தொடர்பாக அவர்கள் தப்புவதற்கு "உதவி புரிந்ததாக கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த குமார் [28 வயது] என்பவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி சென்னை மத்திய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் ஒன்பது பேர் சிறைக் காவலர்களைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்கள் இருவர் இரு வேறு சம்பவங்களில் இறந்து விட்டனர்.

இருவர் பொலீஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் தனி அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மற்றைய ஐந்து பேரும் தலைமறைவாகி விட்டனர் இன்னமும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை.

இவ்வாறு இவர்கள் தப்பியது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த 'கியூ' பிரிவு பொலீஸார் இந்த குமார் என்ற வாலிபரை இம் மாதம்7ஆம் திகதி கைதுசெய்தனர்.

குமார், விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்றும் தடா சட்டத்தின் கீழ் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைக்கைதிகள் தப்பிக்க ஏதுவாக, சிறைப்பூட்டின் திறப்பை இவர் செய்து கொடுத்திருந்ததாகவும்—

சிறையில் இருந்து தப்பியவர்களுக்கு சயனைட் குப்பிகளை இவர் வழங்கியதாகவும்—

விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளனவாம்.

சிறையில் இருந்து தப்பிய ராஜேஷ்குமார் என்பவர், சிறைக்கதவின் திறப்பின் அச்சினை சவர்க்காரத்தில் பதித்து, இவரைப்பார்க்க குமார் வந்தபோது கொடுத்திருந்தார்; அதன் மூலம் போலியான திறப்பொன்றை தயாரித்து குமார் வழங்கினார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தற்போது குமாரை தீவிர விசாரணைகளுக் குட்படுத்திய பொலீஸார் விடுதலைப் புலிகள் சந்தேகநபர்கள் தப்பி ஓடிய சம்பவம் தொடர்பாக தமக்கு புதிய சில தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் —

அதனடிப்படையில் சிறையிலிருந்து தப்பியவர்கள் விரைவில் பிடிபட்டு விடுவர் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். [இ-5]

## ஆலயங்களில்

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீலாயதாக்ஷி சமேத காயாரோகண சுவாமிகள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை வரை பத்தொன்பது தினங்கள் நடைபெறும்.

28ஆம்திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள்தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-5-111)

★ ★ ★

அளவெட்டி தெற்குநாகேஸ்வரம், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு ஏகாதசித் தீர்த்த விழா சிறப்பாக நடைபெறும். (5-151)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி அருள் மிகு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சப்பரத்தின் வெள்ளோட்ட விழா நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (5-135)

★ ★ ★

சுன்னாகம் கிழக்கு, அருள் மிகு சிவபூதராயர் சுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள, சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

அத்துடன் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகிய இவ் ஆலய மகோற்சவத்தில், தேர்த்திருவிழா இம்மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தோற்சவம் 16 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

விழாவில், தினமும் சிவானந்தவாரிதி சிவத்திரு. வ. குமாரசுவாமிஐயாவின், "சொக்கநாதன் திருவிளையாடல்" என்ற பொருளிலான தெய்வீக உரையும் இடம்பெறுகிறது. (இ-5-89)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 11

வண்ணார்பண்ணை மகாகணபதி மூர்த்தி ஆலய வருடாந்த மணவாளக்கோல விழா இன்று நடைபெறுகிறது.

காலையில் சங்காபிஷேகமும், இரவு விநாயகப்பெருமான் வீதி உலா வருதலும் இடம்பெறும். (அ)

★ ★ ★

சாவகச்சேரி, ஏப். 11

மீசாலை வடக்கு வேம்பிராய் கலட்டியிற் பிள்ளையார் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (அ-31)

★ ★ ★

தென்மராட்சி, ஏப். 11

சாவகச்சேரி விறுமர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று மாலை நடைபெறும். (அ-117)

## 28 பேர் கொண்ட தற்கொலை படை கொழும்பில்?

கொழும்பு, ஏப். 11

28 உறுப்பினர்களைக் கொண்ட தற்கொலைப்படை அணிஒன்றுகொழும்பில்கடந்த இரண்டு மாதங்களாகத் தங்கியிருப்பதாக சிரேஷ்டபொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சண்டே லீடர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## சுவாமி பரமானந்தா சமாதியானார்

வதிரி ஸ்ரீபரமானந்த ஆச்சிரம ஸ்தாபகரும் அதன் ஆயுட் காலத் தலைவருமாகிய சுவாமி ஸ்ரீ பரமானந்தா நேற்று திங்கட்கிழமை நண்பகல் சமாதி எய்தினார். [ஆ]

## சங்கீத ஆசிரியர் சேவைப் பயிற்சி

தென்மராட்சி, ஏப். 11

தென்மராட்சி கல்விக் கோட்ட சங்கீத பாட ஆசிரியர்களுக்கு கடந்த 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவிருந்த சேவைக்கால பயிற்சி வகுப்புகள் இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் நடைபெறும் என கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் அறிவித்துள்ளார். (அ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் மாவட்ட ரீதியான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீடமைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் யங் றோயல் வி. க. அணியை எதிர்த்து யங்ஹென்றீஸ் வி.க.அணிமோதும். [உ]

★ ★ ★

சுன்னாகம் அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப் படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 2 30 மணி:- மட்டுவில் மோகன்தாஸ் வி. க. "பி" எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க.

★ 4.30 மணி:- மட்டுவில் மோகன்தாஸ் வி. க. "ஏ" எதிர் யாழ். ஐங்கரன் வி.க. (உ)

## கட்சித்தாவல் தடுப்பு சட்டத்தில் மாற்றம்

கட்சித் தாவல் 'தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு அரசமைப்புச் சீர்திருத்தத்துக்குப் பொறுப்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு உத்தேசித்துள்ளது.

இது இடம்பெற்றால் கட்சி விட்டு கட்சி மாறும் எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் தங்கள் பதவிகளை இழக்கமாட்டார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது. [இ-எ]

# பட்டதாரிகளுக்கே ஜனாதிபதி பதவி
### ஜே. வி. பி. கோருகிறது

கொழும்பு, ஏப். 11

பட்டதாரிகளே நாட்டின் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் இருக்கவேண்டும். அதற்கேற்ற விதத்தில் புதிய அரசமைப்பு இருக்கவேண்டும்.

ஜே.வி.பி. தூதுக்குழு அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது முன்கண்டவாறு தெரிவித்தது.

மக்கள் ஐக்கிய முன்னணியும் இந்த நிலைப்பாட்டையே வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும். அதிகாரப் பகிர்வு சிறிய நிர்வாக அலகுகளை மையமாக கொண்டு வழங்கப்பட வேண்டும் என்றும் ஜே. வி. பி. தூதுக்குழு தெரிவித்தது.

நாடு சீரழிந்துள்ளதற்கான பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் ஏற்கவேண்டும் என்றும் ஜே.வி.பி. தூதுக்குழு தெரிவித்தது. (இ-எ)

### ஆசிரியர்களிடமிருந்து
# ஜப்பானில் பயிற்சி பெற விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் ஏப். 11

ஜப்பான் தெற்காசிய இளைஞர் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற தகுதியான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், வடக்கு, — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 24 ஆம் திகதி ஆகும்.

நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 27 ஆம் திகதி திருகோணமலையிலுள்ள, வடக்கு—கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

[illegible] பாடசாலையில் பணியாற்றுபவராயும், [illegible]-35 வயதுக்கு உட்பட்டவராயும், ஆங்கிலத்தில் சரளமாக பேசவும், எழுதவும் வல்லவராயும், இதற்கு முன் ஜப்பானுக்குச் சென்றிராதவராயும் இருக்க வேண்டும்.

திருமணமாகாதோருக்கும், நாடகம், நடனம் போன்ற அழகியல் மற்றும் கலாசார செயற்பாடுகளில் அனுபவம் உடையோருக்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப் படும்.

இதற்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்களை கல்வித் திணைக்கள, யாழ் வலயம் 1 இன் திட்டமிடல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. [ஐ-5]

# புத்தளத்தில் வனபரிபாலன ஊழியர் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஏப். 11

புத்தளத்தில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய கோஷ்டி ஒன்றினை சுற்றிவளைத்துப் பிடிக்க முயன்றபோது, புத்தளம் வன பரிபாலனசபை உத்தியோகத்தர் உட்பட நால்வர் அக் கோஷ்டியின் கடும் தாக்குதல்களுக்கு உள்ளாகினர்.

இவர்கள் தற்போது புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், அட்டவிலுவ தேக்கு மர பாதுகாப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மரம் வெட்டப்படுவதாக வனபரிபாலன சபைக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து - வனபரிபாலன சபை உத்தியோகத்தர்கள் இக் கோஷ்டியினரை பிடிக்க விரைந்தனர்.

அங்கு ஆயுதங்களுடன் நின்ற இந்தக் கோஷ்டியினர் வனபரிபாலன சபை உத்தியோகத்தர்களை தாக்கியதுடன், அவர்கள் பயணம் செய்த ஜீப் வண்டியையும் சேதப்படுத்தினர், அத்துடன் இந்த உத்தியோகத்தர்களின் துப்பாக்கிகளும் அபகரிக்கப் பட்டன.

தற்போது, இச்சம்பவம் பற்றிய விசாரணைகளை ஆனைமடுவ பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். [இ-5]

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 11

கோப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. பொ. வீரபத்திரனுக்கு சேவை நலன் பாராட்டுவிழா ஒன்று நாளை புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் கல்விக்கோட்ட அதிபர்கள் இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். (இ-3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 11

வேலணை — ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும். (அ)


## அவைக்காற்றுகை ...
நாடக அரங்கக் கல்லூரியின்
நாடகங்கள் மூன்று

✱ பாலுக்குப் பாலகன்
[சிறுவர் நாடகம்]
✱ ஆரொடு நோகேன்?
✱ கூர்

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்
16 . 04 . 1995 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 10 மணி, பிற்பகல் 4 மணி
[இரு காட்சிகள்]

**நுழைவுக்கட்டணம் = 20/-**

அரங்கு தளைநீக்கத்திற்கான
தாக்கவன்மையுள்ள சாதனமாகிறது.

விளம்பர அன்பளிப்பு:
**ஜெயா அழகு மாடம்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். [36178]



## மரண அறிவித்தல்கள்

### திருஞானசம்பந்தக்குருக்கள் இரத்தினம்மா

ஆவரங்காலைச் சேர்ந்த திருஞானசம்பந்தக்குருக்கள் இரத்தினம்மா நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திருஞானசம்பந்தக்குருக்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரஐயர், காலஞ்சென்ற குருசாமிஐயர், மற்றும் சிவசாமிஐயர் (உயர் நீதிமன்றம் அனுராதபுரம்), பாஸ்கர மகாராசாஐயர் (அச்சுவேலி பிரதேச சபை), உலகமாதா, சண்முகசோதி, மகாராணி (பிரதேச செயலகம் கோப்பாய்), இந்திராணி (விவசாயத் திணைக்களம் திருநெல்வேலி), ஸ்ரீபதிஐயர் (விவசாயத் திணைக்களம் திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராசாக்குருக்கள்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), குணசிங்கம், குமாரசாமிஐயர், கலாநாயகி, விமலராணி, கிருஷ்ணநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11 - 4 - 95) 12.00 மணிக்கு ஆவரங்காலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாஸ்கரமகாராசாஐயர்
(மகன்)

ஆவரங்கால் சந்தி. (36175)

### ஆறுமுகம் ஜெயரத்தினம்
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, கிரான்லி வீதி)

ஆறுமுகம் ஜெயரத்தினம் 09 - 04 - 95 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கலாரஜனியின் அன்புக் கணவரும், கொக்குவில் கிழக்கு, அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், 66/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிரத்தினம் மற்றும் ஆசைரத்தினம் தம்பதிகளின் ஆசை மருமகனும் திரு. ஜயந்தன்[லண்டன்],திரு. ஜயேந்திரன்[லண்டன்] ஆகியோரின் அருமைத் தந்தையும், விஜயபாரதியின் மாமனாரும், திரு. நாயகம்பிள்ளை [சிங்கப்பூர்], முத்தையா [சிங்கப்பூர்], சந்திரசேகரம் [சிங்கப்பூர்], திரு. செல்வரத்தினம் [லண்டன்], காலஞ்சென்ற திரு. அதிசயரத்தினம் [அதி], திரு. விஜயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசமணி, கிளி, தெரேசா, காலஞ்சென்ற சிந்தியா மற்றும் சரோஜினிதேவி, காந்தினி என்பாரின் மைத்துனரும், ஜனனியின் அன்புப் பேரனும், யதுஜன், அஜிதன், சிராஜ், சர்மிளா, ஈஸாத் ஆகியோரின் பெரிய தந்தையும், இந்திரன், யோகேந்திரன், மித்திரன், இரவீந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 - 4 - 95 இன்று பி. ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கலாரஜனி
(மனைவி)

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [36177]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## அரச எம். பியின் பேச்சு

வடக்கு - கிழக்கில் நடக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம். பியான நந்த குணசிங்கா நாடாளுமன்றத்தில் பலத்த குரல் எழுப்பியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதாகவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகவும் தென்னிலங்கை மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து வாக்குப்பெற்றே பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

ஆகையால் அரசாங்கத் தரப்பு எம். பி ஒருவர், போரை முடிவுக்குக்கொண்டு வருமாறு நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பது ஒன்றும் விசேடமானது அல்ல. அடுத்த பக்கத்தால் நோக்கினால், ஆளுங்கட்சி எம். பிக்கள் எல்லோரும் போரை நிறுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கை எடுக்குமாறு தமது தலைமைப் பீடத்தை நெருக்கி, அழுத்தம் கொடுத்து வாக்காளர்களுக்கு அளித்த வாக்குறுதியை செயலாக்க உழைத்திருக்க வேண்டும்.

தேர்தல் முடிந்து, ஆட்சிக் கட்டில் ஏறி, சுமார் ஒன்பது மாதங்கள் கடந்தும் அரசாங்க எம். பிக்களால் அதனைச் செய்ய முடியவில்லை. இது அவர்களின் பலவீனத்தையே மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத தன்மையையே பிரதிபலிக்கிறது.

எனினும் திரு நந்த குணசிங்காவின் நாடாளுமன்ற உரை, ஏனையோரின் பேச்சுக்களை விட சற்று வித்தியாசமானதாக இருப்பதை குறிப்பிடலாம்.

கொழும்பில் தும்முல்ல சந்தியில் 300 கிலோ எடையுள்ள "பரல்" குண்டு ஒன்று வெடித்தபோது ஏற்பட்ட அழிவை நாம் அறிவோம். வடக்கில் கடந்த பத்து வருட காலத்தில், 300கிலோ எடையுள்ள 13,000 குண்டுகள் போடப்பட்டுள்ளன. அவ்வாறாயின் வடக்கில் உண்டான அழிவு எவ்வாறு இருந்திருக்கும்?—என்று யதார்த்தமாகவும், ஆழமாகவும் சிந்தித்துப் பேசியுள்ளார் காலி மாவட்டத்தைச் சேர்ந்த அந்த நாடாளுமன்ற உறுப்பினர்.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நந்த குணசிங்கா போன்று யதார்த்தமாகச் சிந்தித்தால், அரச தலைமைப்பீடத்துக்கு அழுத்தம் கொடுத்தால் போரை முடிவுக்குக் கொண்டு வருவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இப்போது கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பம் போன்று இனிமேல் எப்போதும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட மோதல் தவிர்ப்பு (போர் இடை நிறுத்தம்) ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்து விட்டன.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதங்களில் நிரந்தர போர் நிறுத்தத்தை வலியுறுத்தினார். ஆனால் அரசாங்கம் அது குறித்து பெரிதாக அக்கறை காட்டவில்லை; பின்னடித்து வருகிறது.

எனவே நந்த குணசிங்கா போன்ற அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையிலும், பொதுக் கூட்டங்களிலும் பேசுவதற்குப் பதிலாக, தமது கட்சிக் கூட்டங்களில், அரசாங்க நாடாளுமன்றக் கூட்டங்களில் நிரந்தர போர் நிறுத்தம் செய்யுமாறு தலைமைத்துவத்துக்கு இடித்துரைக்க வேண்டும்; அது பயன் தரவில்லையெனில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இராணுவ நலன்களுக்கு முன்னுரிமை அளிக்காமல், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கே முதலிடம் தர வேண்டும் என்பதனை சந்திரிகாவுக்கு எடுத்துச் சொல்வதற்கு, அழுத்தம் கொடுப்பதற்கு ஆளுங்கட்சி எம். பிக்களைவிட சக்தி மிக்கவர்கள் எவருமில்லை! செயலில் காட்டுவார்களா?

மோட்டார் சைக்கிள் கொள்வனவு:

# விதி முறைகளுக்கு அமைய சிபார்சு செய்ய அறிவுறுத்து

நிறுவனத் தலைவர்கள் அரச அலுவலர்களின் மோட்டார் சைக்கிள் கொள்வனவு விண்ணப்பத்தை சிபார்சு செய்யும்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இது தொடர்பாக கடந்த 15-3-95 திகதியிட்டு வெளியிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, மோட்டார் சைக்கிள் பாவிப்பதற்கு உரித்துடையவர்களின் விண்ணப்பங்களை மட்டுமே சிபார்சு செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். சுகாதார சேவை மாகாண பிரதி பணிப்பாளர் தமது பிரிவை சேர்ந்த சகல நிறுவனத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்தியாவசிய சேவையில் அமர்த்தப்பட்ட அலுவலர்கள் —

திணைக்கள நிதி ஏற்பாடு உள்ளதும், பிரயாணப் படிக்கு உரித்துடையவர்களுளதுமான அலுவலர்கள் — ஆகியோருக்கு மட்டுமே மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான சலுகை கூட்டுப்படை தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

சமீபத்தில் திணைக்கள தலைவர்கள் பலர் தங்களுக்கு கிடைக்கின்ற எல்லா விண்ணப்பங்களையும் சிபார்சு செய்வதை அவதானிக்க முடிகின்றது என்றும் —

இதனால் அத்தியாவசிய தகுதியுடைய அலுவலர்களின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட ஏதுவாகின்றது என்றும் —

ஆதலால் மோட்டார் வாகன விண்ணப்பத்தை சிபார்சு செய்யும்போது அத்தியாவசிய தேவைக்கான காரணத்தைக் குறிப்பிட்டு சிபார்சு செய்யும்படியும் — யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-135]

# பெண் அரச ஊழியருக்கு 84 நாள் பிரசவ லீவு

### அரசு இணக்கம் தெரிவிப்பு

பெண் அரச ஊழியர்களுக்கு 84 நாள்கள் பிரசவ லீவு வழங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

பொதுச்சேவைகள் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் இந்த இணக்கம் ஏற்பட்டதாக பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத் தலைவர் எச். பியதாச தெரிவித்துள்ளார்.

பெண் அரச ஊழியர்கள், பிரசவத்துக்கு பின்னர், தனது குழந்தைகளுக்கு பால் ஊட்ட தினமும் ஒருமணி நேரம் சம்பளத்துடனான லீவு ஐந்து மாதங்களுக்கு வழங்கப்படும்.

கர்ப்ப காலத்தில் தினமும் அரைமணி நேரம் பிந்தியும், அரைமணி நேரம் முந்தியும் சம்பளமற்ற லீவில் செல்லவும் அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஐ-3]

# உள்ளூராட்சி நிறுவன விவரங்கள் சேகரிப்பு

### மாகாணசபை நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் விவரங்களை வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் சேகரித்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மாநகர, நகர மன்றங்கள் பிரதேச சபைகள் ஆகியவற்றின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், மகப்பேற்று பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் விவரங்களை இம் மாதம் 20ஆம் திகதிக்குமுன் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5-173)

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள

# எக்ஸ்-றே இயந்திரத்தை பராமரிப்பதற்கு பயிற்சி

### இருவர் வெளிநாடு செல்வர்

யாழ்ப்பாணம், ஏப். 11

ஜேர்மன் அரசினால், யாழ். வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட "எக்ஸ்றே" இயந்திரத்தைப் பராமரிப்பதற்கான பயிற்சியை பெறுவதற்காக, இங்கிருந்து டாக்டர் ஒருவரும், தொழிநுட்பவியலாளர் ஒருவரும் இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளனர்.

அடுத்த மாதமுற்பகுதியில் இங்கிலாந்து செல்லவுள்ள இவர்கள் இருவரும், அங்கு இரண்டு மாதகாலம் இப்பயிற்சியை மேற்கொள்வர்.

அதேசமயம், தற்போது யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டுள்ள இந்த "எக்ஸ்றே" இயந்திரத்தை பொருத்துவதற்கான வேலைகளை மேற்கொள்வதற்காக, ஜேர்மனியில் இருந்து பொறியியலாளரின் வருகையை எதிர்பார்த்து இருப்பதாக யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார். [இ 5-4]

ஆசிரிய பயிற்சி கலாசாலை

# தற்காலிக விரிவுரையாளர் நிரந்தரம் ஆக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஏப். 11

நாடு முழுவதிலுமுள்ள ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் பணி புரிந்து வரும் தற்காலிக விரிவுரையாளர்களை நிரந்தரம் ஆக்குவதென கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன உறுதியளித்துள்ளார்.

தற்போது, ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் நிலவும் விரிவுரையாளர் பற்றாக்குறைகளை நீக்கும் வகையில் பாடசாலைகளில் பணியாற்றுவோரே இங்கும் தற்காலிக விரிவுரையாளர்களாக கடமை புரிந்து வருகின்றனர்.

கடந்த 29 ஆம் திகதி இசுருபாய — கல்வி, உயர் கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்ட மேற்படி கலாசாலை அதிபர்கள், இது தொடர்பான விவரங்களை அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

அப்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. [இ-135]

## விசர்நாய் கடி தடுப்பு மருந்து தட்டுப்பாடு

சண்டிலிப்பாய், ஏப். 11

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஏ- ஆர்- வி எனப்படும் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

விசர்நாய்க் கடிக்கு ஆளான சிலர் டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் வவுனியாவுக்கு சென்று அங்குள்ள அரசினர் வைத்திய சாலையில் விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்தை போடுவித்து வருவதாக அறியப்படுகின்றது. (இ-135)

## புலிகளின் குரல் வானொலியில்

11 — 04 — 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — நேற்று நடைபெற்ற 4 ஆம் கட்ட பேச்சுவார்த்தையின் தொகுப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய "பார்வைகள் பலவிதம்"
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள் என்பன இடம் பெறும்

12 — 04 — 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலிமதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்கு சிலவிநாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## அகதிகள் நலன் கருதி நூல் நிலையம்

சண்டிலிப்பாய், ஏப். 11

சங்கானையிலுள்ள நீதிவான் அகதி முகாமிலுள்ள இடம் பெயர்ந்த மக்களின் நலன் கருதி "போறூட்" நிறுவனம் நூல் நிலையம ஒன்றை திறந்துள்ளது.

திரு. எஸ். இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் பிரதம அதிதியாக வலி. மேற்குபிரதேசசெயலர் திரு.கா. சந்திரராசா கலந்து கொண்டார். சங்கானை பொது நூலக நூலகர் திரு மா. கணேஷ், விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. முகிலன் ஆகியோர்உட்பட பலர் இதில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்கள். (இ-135)

## மின்னலுக்கு 7 பேர் பலி

கொழும்பு, ஏப். 11

தெற்கில் மின்னல், தாக்கி 7 பேர் இறந்துள்ளனர்.

கிரியல்ல பகுதியில் ஒரு மரத்தில் தேன் சேகரித்துக் கொண்டிருந்தவர்களை மின்னல் தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

மற்றும் சில பகுதிகளில் மேலும் 3 பேர் மின்னலுக்கு பலியானார்கள். (இ-3)

## ஜேர்மன் நிறுவனம் மோசடி

கொழும்பில் நீர்விநியோக வேலைகளை மேற்கொண்டு வந்த ஜேர்மன் கம்பனி ஒன்று 66 லட்சம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் தற்போது வெளிவந்துள்ளது.

அந்த கம்பனியில் வேலை செய்த ஊழியர்களின் மேலதிக வேலைப்படி—

சேமலாப நிதிக்கான கொடுப்பனவு — ஆகியவை செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## மொரார்ஜியின் உடல் நிலை மோசமடைகிறது

பம்பாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் உடல் நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

அவரின் இரத்த அழுத்தம் மிகவும் குறைந்துள்ளதாகவும் அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[illegible] கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. [இ-14]

# பிரபா-சந்திரிகா ஒப்பந்தம் மூலம் உண்மையான அமைதி ஏற்படாது

### அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 11

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்பந்தத்தில் கையொப்பம இடுவதனால் மட்டும் அமைதியை ஏற்படுத்த முடியாது. தமிழ்—முஸ்லிம் மக்களின் உள்ளங்களில் அமைதி ஏற்பட்டால் மாத்திரமே உண்மையான சமாதானம் ஏற்படும்.

புனர்வாழ்வு புனரமைப்பு கப்பல்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்—மூஸ்லிம் மக்கள் மீண்டும் சகோதரர்களாக அமைதியாக வாழும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதற்கு நானும் எனது முஸ்லிம் காங்கிரஸும் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய அமைதி காக்கும் படை இங்கு அனுப்பப்பட்டது.

உலகிலேயே நான்காவது பெரிய படையாகிய இந்தியப் படையால் இங்கு அமைதியை தோற்றுவிக்க முடியவில்லை.

இதுவரை தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்; இதனால் விரக்தியடைந்த நிலையிலேயே அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள்.

இவ்வாறு அஷ்ரப் மேலும் தெரிவித்தார். [இ-5]

# பொருளாதாரத் தடை நீக்கம் உரிய முறையில் அமுலாகிறதா?

### அரசு உறுதி செய்ய வேண்டும் என்கிறது சமாதான சபை

கொழும்பு, ஏப். 11

வடக்கு மீதான பொருளாதாரத் தடை நீக்கம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை அரசு உறுதி செய்யவேண்டும்.

இப்படி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது தேசிய சமாதான சபை

வடக்கு மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதாக அரசு அறிவித்திருந்தபோதும்—

தடை நீக்கப்பட்ட பொருள்கள் சரியான முறையில் வடக்கே போவதில்லை என்று தெரிவித்துள்ள அந்த சபை, பொருள்கள் வடக்கே போவதை உறுதிசெய்யவேண்டும் என்று கேட்டுள்ளது. (இ-3)

பல்கலைக்கழக "ராக்கிங்"

# நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மாணவர் சங்கம் கோருகிறது

புதுவருட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் "ராக்கிங்" ஐ முற்றிலும் நிறுத்த பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் புதிய நடைமுறையை கையாளவிருக்கிறது.

ராக்கிங்கில் ஈடுபடும் மாணவர்களை இனங்கண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாணவர் சங்கம் முன்வந்துள்ளது.

மாணவர்களில் ஒரு பிரிவினர் மேற்கொள்ளும் ராக்கிங்கால் மாணவர் சமூகத்துக்கு ஏற்படும் அவப்பெயரை நீக்கமுடியும் என்று மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

# மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வருவதே இரு பிரதான கட்சிகளினதும் தந்திரம்

### ஆரிய புலேகொட தெரிவிப்பு

சுதந்திரம் பெற்றது முதல் ஐ. தே. கட்சியும், ஸ்ரீ. ல. சு. கட்சியும் மாறி மாறி நாட்டை ஆண்டு வந்துள்ளன. மக்களை ஏமாற்றி அதிகாரத்துக்கு வருவதே இந்த இரு கட்சிகளினதும் தந்திரமாக உள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த இலங்கை முற்போக்கு முன்னணியின் ஆறாவது மாநாட்டில் உரையாற்றிய அதன் தலைவர் ஆரியபுலேகொட முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி—

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான ஐ. தே. கட்சி வழிமுறை எதனையும் கொண்டிருக்கவில்லை. ஐ. தே. க. அரசு அன்று செய்ததையே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இன்று செய்கிறது என குறிப்பிட்டார்.

## ஆங்கில வகுப்பு

வலி - வடக்கு பிரதேச இளைஞர் வள நிலையத்தினர் இலவச ஆங்கில வகுப்புக்களை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி-வடக்கு பிரிவு காரியாலயத்தில் நடைபெறும் இவ்வகுப்புகளில் சேரவிரும்புவோர் மல்லாகம் நீதிமன்ற வளவு இளைஞர் வள நிலையத்துடன் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-5-15]

## 50 பேர் பலி

பங்களாதேஷில் ஏற்பட்ட கடும்புயலில் சுமார் 50 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் டாக்காவிலிருந்து 45 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள முன்ஷிகன் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

பிரதமர் பேகம்காலிதா ஸியா பாதிக்கப்பட்ட இடங்களை நேற்றுச் சென்று பார்த்தார். [இ-14]

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்தவர்

### டானியல் நினைவுக் கூட்டத்தில் பேச்சு

இழிசனர் வழக்கு என ஒதுக்கப்பட்ட பேச்சு வழக்கை தனது கதைகளின் ஊடாக இலக்கிய அந்தஸ்துப் பெறச் செய்து, "இலக்கியம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற மரபை உடைத்தெறிந்து, ஈழத்து இலக்கிய வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்த எழுத்தாளர்களில் முதன்மை பெற்றவர் திரு. டானியல்.

எழுத்தாளர் அமரர் டானியல் நினைவு தினக் கூட்டத்தில் பேசிய யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை விரிவுரையாளர் திரு. த. கலாமணி இவ்வாறு கூறினார்.

நினைவுதினக் கூட்டம் யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் சார்பில் மார்ச் மாதம் 23 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் மன்றத் தலைவர் திரு பா. மகாலிங்கசிவம் தலைமையில் நடைபெற்றது.

திரு. கலாமணி தமது பேச்சில் மேலும் கூறியதாவது;

சமூக மெய்மையை சரியாகப் புலப்படுத்தும் வகையில் அமைந்த இலக்கியமே படைப்பாளிக்கு வெற்றியாக அமையும் அனுபவத்தில் இருந்து பிறப்பதுதான் உயிருள்ள இலக்கியமாக அமையுமென்பதில் நம்பிக்கை கொண்டிருந்த திரு டானியலுக்கு அவர் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களே அந்தச் சமூக மெய்மையை இலக்கியமாக்க உதவின.

சமூக மெய்மையைச் சரியாகப் புலப்படுத்தும் வகையில் நிலவுடமை ஆதிக்கத்தின்மேல் காட்டப்பட்டுள்ள சாதிமுறையை அகற்றவும், அதைப் பாதுகாத்து நிற்கும் அரச யந்திரத்தை மாற்றவும், ஆதிபத்திய சிந்தனைகளை அழிக்கவும் படைப்பிலக்கியத்தை ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு சிறந்த பல நாவல்களைப் டானியல் படைத்தார் — என்றார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேசும் போது கூறியதாவது:-

இந்த மண்ணில் வாழ்ந்து மிகச்சிறந்த இலக்கியங்களை அமரர் டானியல் படைத்த போதும், ஒரு காலத்தில் அவரது எழுத்துக்களை விமர்சிக்கத் தயங்கியவர்கள் இன்று ஏகோபித்த குரலில் சிறந்த எழுத்தாளர் என்று கூறும் அளவிற்கு அவர்பற்றிய சிந்தனை வளர்ச்சியடைந்துள்ளது.

இன்று தமிழ் நாட்டில் தலித் இலக்கியம் என்று ஏதோ ஒரு மொழியில் கூறப்படுவதை நாம் எடுத்து நோக்கிறோம். டானியல் இலக்கியங்களுக்குத் தலித் தேவையில்லை யாழ் மண்ணின் பண்பாட்டுக் கூறுகளை தனது நாவல்களினூடாக அவர் வெளிப்படுத்திய போது யார் கைகொட்டிச் சிரித்தார்களோ அவர்கள் இப்போது வெளிநாடுகளில் இருந்து கொண்டு அந்தப் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ச்சி செய்கிறார்கள் —என்று கூறினார்

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலைவிரிவுரையாளர் திரு.சி சிவலிங்கராஜா பேசும்போது கூறியதாவது:-

அறியப்படாத, ஆராயப்படாத கண்டு கொள்ள விரும்பாத பல நிகழ்வுகளை யாழ். பண்பாட்டுப் பாரம்பரிய கோட்பாடுகளை தனது படைப்புக்களினூடாக அற்புதமாக எடுத்துக்காட்டிய ஈழத்தின் தலைசிறந்த இலக்கியவாதி திரு.டானியல்— என்று சொன்னார்.

பல்கலைக்கழக தமிழ்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந சுப்பிரமணியன் பேசும் போது கூறியதாவது,

ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்த நாவல்கள் பலவேறு எழுத்தாளர்களாலும் படைக்கப்பட்டன. ஆனல டானியலின் எழுத்துக்கள் வேறுபாடு கொண்டவை கண்டும் கேட்டு உணர்ந்தும், தனது அனுபவத்தினைப் பிறந்ததுமான அவரது படைப்புக்களில் ஆழமான பார்வை இருந்தது — என்று சொன்னார்.

மன்றச் செயலர் திரு. கிருபாகரன், செல்வி கு. மதிவதனி ஆகியோரும் பேசினார்கள். [ஆ-111]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வ.
சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
ஸ்ரீ அம்பலவாண
வீரகத்தி விநாயகர் கோயில்

## சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

**12-04-95** புதன் காலை 10 மணிக்கும்

## தேர்த் திருவிழா

**14-04-95** வெள்ளி காலை 9 மணிக்கும்
நடைபெறும்

– ஆலய பரிபாலன சபை.

[36163]



## மகோன்னத மலிவு விற்பனை

## திருமாட்டி [சீமாட்டி] புடைவைக் கடல்

மலரும் புத்தாண்டைச் சிறப்பிக்க திருமாட்டி புடைவைப் பெருங்கடலிலுள்ள அத்தனை புடைவைத் தினுசுகளும் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

★ யப்பான், அமெரிக்கன், இந்திய பட்டுப் பருத்திப் புடைவைகள்!
★ மங்கையர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ண வண்ண பட்டு, பருத்திப் புடைவைகள்!
★ பட்டர் சில்க், பலஸ், செக் துணி வகைகள்!
★ ஆடவர், சிறுவருக்கான ஆடைகள்!
★ கிடஸ் பெனியன்கள், இறக்குமதி செய்யப்பட்ட சூட்டிங் சேட்டிங்
★ கறோல்ட் ரீசேட்டுக்கள், பெனியன்கள்
★ விதவித டிசைன்களில் லேஸ்கேட்டின், கேட்டின் துணிகள்!
★ ஒறிஜினல் மாட்டின் சேட், கிப்ஸ் சாரங்கள், பற்றிக் சாரங்கள்!
★ சில்க் பொலியஸ்ரர், கொலிலுட், சபையர் துணிகள்!
★ பிறின்டெட் & பிளேன் ரிகு துணிகள்

திருமண சுபமுகூர்த்தங்களுக்குத் தேவையான பனாரஸ், காஞ்சிபுரம், மைசூர்சில்க், பெங்களூர்சில்க், பட்டு வேட்டிகளின் கைராசியான ஒரே ஸ்தாபனமான திருமாட்டியில் அனைத்து புடைவைத் தினுசுகளும் புத்தாண்டை முன்னிட்டு சழிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

இன்றே நாடுங்கள்:

## திருமாட்டி (சீமாட்டி) புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

[சி-974]



மலிவு! மலிவு!! மலிவு!!!

பிறக்கும் புத்தாண்டை
புதுப் பொலிவுடன் கொண்டாட

### த. குமாரசாமி ஸ்தாபனத்தார்
வழங்கும்

## மலிவு விற்பனை

| | |
|---|---|
| சில்க் பொலிஸ்ரர் பிளேன்கலர் 44'' மீற். | 50/- |
| கைபிறைற் பொலிஸ்ரர் பிரிண்டர்36'' மீற். | 38/- |
| பத்திக் சாரம் | 110/- |
| போய்ஸ் சேட் S M. L. | 100/- |
| போய்ஸ் சேட் XL | 120/- |
| போய்ஸ் சோர்ட்ஸ் | 50/- |
| போய்ஸ் ஜீன்ஸ் [சிறியது] | 75/- |

மற்றும்

இந்தியன் சாறிவகைகள் J. B. சாறிகள், சேட்டிங். சூட்டிங், இவை அனைத்தையும்

ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
இன்றே வருகை தாருங்கள்

### த. குமாரசாமி
### ரெக்ஸ்ரைல்ஸ்

156, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

[36170]



## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் ஜெயரத்தனம்

(உதவி முகாமையாளர்- இலங்கை வங்கி,
2ம் கிளை யாழ்ப்பாணம்)

எமது இலங்கை வங்கிக் கிளையில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய திரு ஆ. ஜெயரத்தினம் அவர்களின் பிரிவையிட்டு ஆறாத் துயரம் அடைகின்ற வேளையில் அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் துயரத்தில் பங்கு கொள்வதுடன் அவரது ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

2ம், கிளை முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(36174)


# படையினருக்குப் பயிற்சி; தவிர்க்க முடியாத ஒன்று!

## யாழ். வந்த பிரிகேடியர் கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 11

"படையினருக்கு பயிற்சி அளிப்பது வழமையான விடயம். அது தவிர்க்க முடியாததொன்று"

இவ்வாறு தெரிவித்தார் நேற்று யாழ் வந்த இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறிபீரிஸ்

"கிழக்கில் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்திய பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். படையினருக்கு பயிற்சி அளிப்பது இராணுவ நடவடிக்கைக்கு முஸ்தீபா! என்று அவரிடம் கேட்ட போது—

பயிற்சி அளிப்பது இராணுவ முஸ்தீபுக்கு நோக்கம் என்று கருதல்ல. வழமையான பயிற்சிதான் வழங்கப்படுகிறது — என்றார்.

4 ஆம் கட்டப் பேச்சுக்களின் போது பல விடயங்கள் பற்றி பேசினோம். அவை தொடர்பான முடிவுகள் ஒரிரு தினங்களில் வெளியாகும்— என்று அவர் சொன்னார்.

[அ-3]

# மொரார்ஜி காலமானார்

புதுடில்லி, ஏப். 11

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் (99 வயது) நேற்று நண்பகல் காலமானார்.

கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அவரது பூதவுடல் அரசமரியாதைகளுடன் நாளை புதன் கிழமை தகனம் செய்யப்படும். ஏழு நாட்களுக்கு அரச ரீதியில் துக்கம் அனுஷ்டிக்கப் படும்.

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியைச் சேராத முதலாவது பிரதமராக 1977 இல் இவர் பதவியேற்றார்.

அதற்கு முன்னர் காங்கிரஸ் கட்சியில் இருந்த போது நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், பிரதி பிரதமர் ஆகிய பதவிகளை வகித்த மொரார்ஜி இந்தியாவின் சுதந்திர போராட்ட வீரர்களில் ஒருவரும் சிறந்த காந்தியவாதியுமாவார். (அ-7)

(முந்திய செய்தி 5 ஆம் பக்கத்தில்)

கடத்தப்பட்ட

# இந்திய மீனவர் 19 பேரும் ஸ்ரீலங்கா கடற்படையிடம்!

சென்னை, ஏப். 11

கடந்த 3 ஆம் திகதி நாகபட்டினம் அக்கரைப்பற்று கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற பின்னர் காணாமல் போன 19 மீனவர்களும் தற்போது ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் இருப்பதாகவும் —

அவர்கள் ஒரிரு தினங்களில் தாயகம் திரும்புவர் என்றும்—

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் டி ஜெயக்குமார் நேற்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இந்தப் 19 பேரையும் இனந்தெரியாத சிலர் கடத்திச் சென்றதாகவும் —

இதனை அடுத்து கடலோரக் காவல் படையும், அந்த வழியால் செல்லும் கப்பல்களும் உஷார்படுத்தப்பட்டதாகவும் —

ஹெலிக்கொப்டர் மூலம் மீனவர்களைத் தேடும் பணி இடம்பெற்றதாகவும் அவர் மேலும் கூறினார்.

(உ-7)

# ஸ்ரீபாத கல்லூரி விரைவில் திறக்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஏப். 11

ஸ்ரீபாத கல்லூரி விரைவில் திறக்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்லூரிக்கு புதிய அதிபராக திரு. ரி. தர்மலிங்கம் கல்வியமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கல்லூரியில் 50 சத வீதமான மலையக மாணவர்களையும், 25 சத வீதமான ஏனைய பகுதி தமிழ் மாணவர்களையும், 25 சத வீத சிங்கள மாணவர்களையும் அனுமதிக்கும் அரசின் முடிவைக் கண்டித்து மலையக தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்தி வரும் நோக்கில் கல்வியமைச்சரின் அறிவிப்பு வெளியாகியுள்ளது

மலையக மக்களுக்கு என ஜேர்மன் அரசு வழங்கிய நிதியில் இருந்தே இந்த கல்லூரி அமைக்கப்பட்டதால் முழுமையாக மலையக மாணவர்களுக்கே இடமளிக்க வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணித்தலைவர் திரு. சந்திரசேகரன் கோரி வருகின்றார்.

[இ-3]

## வறுமை நிவாரண திணைக்களம் மூடப்படும்

கொழும்பு ஏப் 11

உணவு முத்திரைத் திட்டத்தை இவ் வருட ஜூன் மாதத்துடன் முடித்துக் கொள்வது என்ற அரசின் திட்டத்திற்கு அமைவாக, வறுமை நிவாரண திணைக்களம் ஜூன் மாதம் வரை செயல்படும்.

மேலதிக உணவு முத்திரைகளின புதிய தொகுதி ஒன்று, ஜனவரி மாதத்தில் இருந்து பாடசாலை மாணவர்களுக்கென விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவற்றின் பெறுமதி 108 கோடி 50 லட்சம் ரூபா.

உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகளுக்காக 145 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை பிரசவிக்க தாய்மாருக்கென மேலதிகமாக 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது

[இ-5]

## சாதாரணதர பரீட்சை முடிவு வெளியானது

கொழும்பு, ஏப் 11

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி சீ ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுக் கொழும்பில வெளியாகின.

யாழ்ப்பாண பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை கல்விப் பகுதி அதிகாரி ஒருவர் இங்கு எடுத்து வரவுள்ளார்.

அனேகமாக நாளை புதன் கிழமை அல்லது வியாழக் கிழமை பிரஸ்தாப அதிகாரி இங்கு வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## பல்கலைக்கழக மாணவர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப் 11

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான கொடுப்பனவு இன்று வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

தென்மராட்சி, ஏப் 11

தியாகத்தாய் அன்னைபூபதியின் நினைவை யொட்டிய நினைவுக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை இரவு ஏழு மணிக்கு எழுதுமட்டுவாழ் வடக்கு இளஞ்செல்வன் சனசமூக நிலைய முன்றிலில் எழுதுமட்டுவாழ் சிற்றூர் பொறுப்பாளர் நேசன் தலைமையில் நடைபெறும்.

[அ-117]

★ ★ ★

தென்மராட்சி ஏப். 11

அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவையொட்டி மிருசுவில் வர்த்தகர் சங்கம் நடத்தும் சிரமதான பணிகள் இன்று காலை 8 மணி முதல் மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும். [அ 117]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 11

அன்னை பூபதி நினைவையொட்டி மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தினரும், கலைமகள் விளையாட்டுக்கழக பொதுமக்களும் இணைந்து நாளை புதன்கிழமை சிரமதானப் பணியில் ஈடுபடுவர்.

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட

# மாணவர்களின் மகஜர் இன்னும் சந்திரிகாவுக்குக் கிடைக்கவில்லை

## ஜனாதிபதியின் செயலரே உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 11

வெட்டுப்புள்ளி முறையால் பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்கள், பேரணி நடத்தி, யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் ஒப்படைத்த மகஜர் இன்னும் ஜனாதிபதி செயலகத்தைச் சென்றடையவில்லை.

ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபெண்டி நேற்று யாழ்ப்பாணத்தில் உதயன் செய்தியாளரிடம் இத்தகவலை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுடன் நான்காம் கட்டப் பேச்சு நடத்துவதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவரிடம் வடபகுதி மாணவர் பிரச்சினை குறித்துக் கேட்ட போது அவர் கூறியதாவது:-

கொழும்பு வந்துள்ள — பல்கலைக்கழக அனுமதியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகளை — ஜனாதிபதி சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடினார்.

அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். எவ்வாறு நிவாரணம் வழங்கலாம் என்பது குறித்து ஆராய மூன்று அமைச்சர்கள் கொண்ட ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார் — என்றார்.

"பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்திய பேரணியின் பின் யாழ். செயலகத்தில் கையளித்த மகஜர் தமக்குக் கிடைக்கவில்லை என்று இச்சந்திப்பின் போது ஜனாதிபதி மாணவர்களிடம் தெரிவித்ததாக செய்தி வெளிவந்துள்ளது. அது பற்றி கூறமுடியுமா?" எனக் கேட்டபோது —

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்தித்த போது இது விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. மாணவர்கள் குறிப்பிட்ட மகஜர் இன்னும் எமக்கு வந்து சேரவில்லை அது கிடைக்காத போதும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் — என்று அவர் பதிலளித்தார்.

மேற்படி மகஜர் தமக்குக் கிடைக்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தது குறித்து கடந்த சனியன்று "உதயன்" செய்தி வெளியிட்டதும் —

ஆனால் மகஜர் தமக்குக் கிடைத்து சில நாட்களுக்குள்ளேயே கொழும்பில் வைத்து அது கடுகதி பதிவுத் தபாலில் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்டு விட்டதாக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அறிவித்ததும் தெரிந்தவையே. [உ-3]

## சந்திரிகாவை சந்திக்க விரைவு!

புலிகளுடனான பேச்சுக்களை முடித்துக் கொண்டு நேற்றிரவு இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கிய அரசுத் தரப்புக் குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் செயலாளருமான குசும்சிறி பாலபட்ட பெண்டி, விமான நிலையத்திலிருந்து நேரடியாகவே ஜனாதிபதியைச் சந்திக்க அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-6]

## வெள்ளோட்டம்

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தேர் வெள்ளோட்ட விழா முடிவில் சிற்பாசிரியர் கிருஷ்ணர் கலாமோகன் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப் படும் நிகழ்வும் இடம்பெறும் (அ-117)

## ஹொங்கொங் சென்றார் ரணில்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது துணைவியாருடன் ஹொங்கொங் சென்றுள்ளார். எதிர் வரும் 27 ஆம் திகதி அவர் நாடு திரும்புவர். (உ-3)

# பேச்சு விவரத்தை ஜனாதிபதிக்கு கொழும்பு சென்றதும் அறிவிப்பேன்

## பாலபட்டபெண்டி கூறினார்

யாழ்ப்பாணம், ஏப். 11

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பலாபலன்களை கொழும்பு திரும்பியவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எடுத்து விளக்கவுள்ளேன் அவருடன் எடுக்கும் முடிவுளை நாளை செவ்வாயன்று யாழ்ப்பாணத்துக்கு தெரியப்படுத்துவோம்.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. குசும்சிறி பாலபட்டபெண்டி மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

இன்றைய பேச்சுக்களின் போது எரிபொருள் தடை நீக்கம், மீன்பிடித் தடை நீக்கம், கிழக்கில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடல், பூநகரி முகாம் வாபஸ் பெறப்பட்டு பாதை திறத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன —

பேச்சுக்கள் முன்னேற்றகரமாக அமைந்திருந்தன ஆராயப்பட்ட நான்கு விடயங்கள் குறித்தும் சில விளக்கங்களை கொழும்பில் பெற வேண்டியுள்ளது —

கொழும்பு திரும்பியதும் உடனடியாக பேச்சு விவரங்களை ஜனாதிபதியிடம் தெரிவிப்பேன் — என்றும் திரு. பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

(அ-3)

# கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கவும் அரசு மறுப்பு

கிழக்கில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்ற பழைய நிலைப்பாட்டிலேயே அரசு இன்னும் உள்ளது. அது எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

— இவ்வாறு குறிப்பிட்டார் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன்.

போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது என்ற கட்டுப்பாடு குறித்து. தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் சம்பந்தமாக எமது தலைவரும், ஜனாதிபதி சந்திரிகாவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் கூட எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இப்போது புதிதாக அரசுத் தரப்பு கொண்டுவரும் இந்தக் கட்டுப்பாட்டை - நிபந்தனையை — எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது எமது போராளிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதால் அதுகுறித்து எமது தீர்க்கமான முடிவை அரசுத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்— என்றார். (உ-3)

# 19க்கு முன் தீர்வு வராவிடின் புலிகள் பேச்சுக்களிலிருந்து ஒதுங்குவர்!

எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் இணக்கம் கண்டு அதனைச் செயற்படுத்த அரசு தவறும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங்கிக்கொள்வதாக எமது தலைவர் ஏற்கனவே தமது கடிதத்தில் அரசுக்கு அறிவித்துவிட்டார். அதனையே நேற்றைய பேச்சுக்களில் நாமும் வலியுறுத்தினோம்.

— இவ்வாறு கூறினார் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்.

அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் படும் போது அரசியல் பேச்சுக்கு தயாராக இருப்போம் என அரசுத் தரப்பினருக்கு நாம் விளக்கினோம்

19 ஆம் திகதியை நாம் காலக்கெடு எனக் கூறவில்லை.

கடந்த ஆறுமாத காலமாக — நான்கு கட்டங்கள் தாண்டியும் — எதுவித முன்னேற்றமும் இன்றி பேச்சுக்கள் இழுத்தடிக்கப்படுகின்றன. இதனால் அதில் பங்குபற்றுகின்ற ஒரு தரப்பினர் என்ற வகையில் — பேச்சுக்களில் நம்பிக்கை அற்ற நிலையில் — அதில் இருந்து ஒதுங்கிக் கொள்வதான எமது முடிவே தவிர அது நாம விதிக்கும் காலக்கெடு அல்ல.

அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக நாம் முன்வைத்த கோரிக்கைகள் நான்கும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. அவை நான்கிற்கும் ஒன்றாகத் தீர்வு காணப்பட வேண்டுமேயன்றி தனித்தனியாக ஒன்றை விட்டுவிட்டு மற்றதைத் தீர்ப்பதால் பயனில்லை. — என்றும் அவர் கூறினார்.

(உ-8)

## நேற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் கூறினர்.

வடக்கிற்கு பாதுகாப்பான போக்குவரத்துப் பாதை திறத்தல், கிழக்கில் புலிகளின் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடுதல் ஆகிய விடயங்கள் குறித்தும் எமக்குச் சாதகமான பதிலை அவர்கள் தரவில்லை.

இந்த விடயங்கள் குறித்து எமது உறுதியான — இறுதியான — முடிவுகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எமது கருத்தை ஜனாதிபதியுடன் கதைத்து நாளை [செவ்வாய்க்கிழமை] பதில் தருவதாக அரசுப் பிரதிநிதிகள் கூறினர்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவுகளை நேற்றைய பேச்சுக்களில் வெளியிட்டனரே தவிர, அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான எந்த முடிவையும் அவர்கள் எடுத்து வரவில்லை.

பேச்சை இழுத்தடிக்கும் நோக்கம் அரசுக்கு உள்ளது இராணுவம் யுத்தத்துக்குத் தயாராவதை துரிதமாக மேற்கொள்கின்றது.

அரசுத் தரப்பினர் கூறும் வாக்குறுதிகளை நாம் நம்பத் தயாராயில்லை. அரசின் உத்தியோகபூர்வமான அறிவிப்பை, அது நடைமுறைப்படுத்தப்படுவதையே நாம் எதிர்பார்க்கிறோம்.

நான்காம் கட்டப் பேச்சுகள் வரை உறுதி மொழிகள்தான் தரப்பட்டன. உத்தியோக பூர்வ அறிவிப்பு வரவில்லை — என்றார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 898/5 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 04 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org